### புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறக்கப்படும் சரித்திர நிகழ்வில் - குடியரசுத் தலைவரை அறவே புறக்கணிப்பது என்பது

# மோடி அரசின் ஜனநாயக விரோதப் போக்கிற்கு பெரிய சான்று!

## “நியூஸ் -18” ‘சொல்லதிகாரம்’ விவாத நிகழ்ச்சியில் - பத்திரிகையாளர் கார்த்திகேயன் கண்டனம்!

**நியூஸ் 18 தொலைக்காட்சியில் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில், “புதிய நாடாளுமன்றத் திறப்பு, எதிர்க்கட்சிகள் போர்க்கொடி , குடியரசுத் தலைவருக்கான உரிமைக்குரலா? மோடி எதிர்ப்பு அரசியலா?” என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் பத்திரிகையாளர் கார்த்திகேயன் அவர்களின் விவாதம் வருமாறு:**




**நெறியாளர்:** புதிய நாடாளுமன்ற கட்டிடத்திறப்பு விழாவில் குடியரசுத் தலைவரை அழைக்க வேண்டும் என்பது 36 சதவிகிதத்தினரின் கோரிக்கை தான் என்று சொல்லப்படுகிறதே. இது குறித்து நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** இந்த நாடாளுமன்ற திறப்பு விழாவினை எந்த அளவிற்கு அரசியல் படுத்த நினைக்கிறார்கள் என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம். அப்போ, 1947 இல் ஆட்சியை மாற்றிக் கொடுப்பதற்காக செங்கோல் தேவைப்பட்டது, காலனி ஆதிக்கத்தில் இருந்து நாம் சுதந்திர நாடாக நம் கையில் அதிகாரம் வழற்குவதற்காக அப்போது செங்கோல் பயன்படுத்தப்பட்டது என்பதெல்லாம் சரி, அதற்குப் பிறகு 1950 இல் நாம் குடியரசாக ஆகி விட்டோம்.

நமக்கென்று ஒரு அரசியலமைப்புச் சட்டம் வந்துவிட்டது. இப்போது அரசியல் அமைப்புச் சட்டம் தானே நமது கவர்ன்மெண்ட். அதில் யார் பிரதமராக இருந்தாலும், யார் குடியரசுத் தலைவராக இருந்தாலும், அரசியலமைப்புச் சட்டத்தின் விதி ஆர்ட்டிக்கல் 79 -ன்படி, அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர், இரண்டு அவைகள் தானே அங்கம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி தானே இவை செயல்பட வேண்டும்.

**நெறியாளர்:** இங்கே விவாதத்தில் பங்கேற்ற தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் இது குறித்த ஒட்டுமொத்த கருத்துகளின் சாராம்சத்தையும் (ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் விவாதத்தில் பேசுகையில் தமிழகம், சத்திஷ்கர் மாநில சட்டமன்றங்கள் திறந்த போதும் ஆளுநரை அழைக்க வில்லை என்று மேற்கோள் காட்டி பேசினார்) இங்கே கருத்துகளை பகிர்ந்து கொண்டார், நீங்கள் அது குறித்து பேசுங்கள்.

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** தமிழகத்தில் சட்டமன்றம் திறந்து வைத்தபோது பிரதமர் தலைமையில்தான் செயல்பட்டது, சத்திஷ்கரில் செய்யவில்லை என்று தெலுங்கானா ஆளுநர் பேசினார், அவர்கள் தான் தவறு செய்துவிட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம், நீங்கள் சரியாக அதனைச் செய்ய வேண்டியது தானே.

**செங்கோல் முக்கியமா, இந்திய அரசியலமைப்பு சட்டம் முக்கியமா, செங்கோல் என்று சொல்லிவிட்டு, தமிழ் பின்னாடி போய் ஒளிந்து கொள்வது சரியல்ல.** அவர்கள் சொல்லும் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

நான் சொல்வது அரசியலமைப்புச் சட்டத்தின் படி நாடாளுமன்றம், அரசியலமைப்பில் குடியரசுத் தலைவர் மற்றும் இரண்டு அவைகள். அதில் முதலில் வருவது கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ். அதற்கு பிறகுதான் ஹவுஸ் ஆப் பீப்பில்ஸ் வருகிறது. அப்போது இந்த நாடாளுமன்றத்தின் இரு அவைகள் இருக்கின்றதே, ஏன் அழைப்பிதழில் கூட துணைக் குடியரசுத் தலைவர் ராஜ்யசபாவின் தலைவர், அவருடைய பெயரும் அந்த அழைப்பிதழில் இல்லை. பாராளுமன்றம் என்பது மக்களவை மட்டும் தானா? அதில் மாநிலங்களவையும் இருக்கிறது. அதனுடைய தலைவரை அழைப்பிதழில் போடாதபோதே அவர்களின் நோக்கம் அதில் தெரிகிறது. துணை குடியரசுத் தலைவர் ராஜ்யசபாவின் தலைவர் என்ற முறையில் அழைக்கப்பட்டால் குடியரசுத் தலைவரைப் புறக்கணித்துவிட்டு துணை குடியரசுத் தலைவரை மட்டும் அழைக்க முடியாது, அதனால் ராஜ்யசபாவின் தலைவரையும் இதற்கு அழைக்காமல், நாடாளுமன்ற சபாநாயகர் ஓம். பிர்லா அவர்களின் பெயரை மட்டும் இடம் பெறச் செய்து இருக்கிறார்கள்.

**நெறியாளர்:** ஆளுநர் தமிழிசை, குடியரசுத் தலைவரை நீங்களே திறந்து வையுங்கள் என்று பிரதமர் கேட்டுக் கொண்டதாக...” என்று கூறினாரே?

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** இப்படி விவாதங்கள் எல்லாம் வைக்கலாம். ஒரு பிரதமர் என்ன சொல்ல வேண்டும், நியாயப்படி நீங்கள் தான் வந்து ஹெட் ஆப் த ஸ்டேட் அரசியலமைப்புச் சட்டத்தின் படி, ஆர்ட்டிகல் 79 ன் படி, பாராளுமன்றம் என்பதே முதலில் குடியரசுத் தலைவர் தான், அதன் பிறகு இரண்டு அவைகள், பாராளுமன்றத்தை விளக்கம் போது இதனைத் தான் அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. நீங்கள் யூனியன் ஹோம் மினிஸ்ட்ரி மத்திய உள்துறை அமைச்சகம், டேபிள் ஆப் தி பிரசிடென்சி என்று சொல்லி ஒரு வரைமுறை வைத்து இருக்கிறது. அதிகாரப் பூர்வமாக என்ன வரிசையில், யார் முதலில் ஆரம்பிக்கிறார் என்று வரிசையாக பெயர்களை வரையறுத்து இருக்கிறது.

அதில் முதலில் குடியரசுத் தலைவர் தான் வருகிறார். இரண்டாவது துணை குடியரசுத்தலைவர் வருகிறார். மூன்றாவதாகத் தான் பிரதமர் வருகிறார். இது தான் டேபிள் ஆப் பிரசிடெண்சி, இதை ஒன்றிய உள்துறை அமைச்சகம் பிரதமர் செக்கிரடேட்டின் ஒப்புதலோடு இருக்கிறது. இப்போது கூட வெப் சைட்டில் இது இருக்கிறது அதனை நீங்கள் பார்க்கலாம்.

அதன் படி பார்த்தால் தொடக்க விழாவை செய்ய வேண்டியது யாரு, பிரதமரா? குடியரசுத்தலைவர் தானே செய்ய வேண்டும். **நீங்கள் அவரை முற்றிலுமாக புறக்கணித்து விட்டு போகிறீர்கள், அவர் கேட்டுக் கொண்டார் என்பதா, முதலில் ஒரு நிகழ்ச்சிக்கு குடியரசுத் தலைவர் வருவதாக இருந்தால், அவர் பங்கு கொள்கிற நிகழ்ச்சியாக இருந்தால், அவருடைய பெயர் அழைப்பிதழில் இருக்க வேண்டும். அதனை தவிர்க்கவேண்டும் என்பதற்காக, பிரதமர் தலைமையில் விழா நடக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தானே அவர்கள் இல்லாமலேயே விழா நடத்துகிறார்கள்.**

**நெறியாளர்:** விழா மிகவும் எளிமையாகத்தானே நடத்துகிறார்கள். ?

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** என்ன எளிமையாக வேண்டுமானாலும் நடத்தட்டும், ஒரே ஒரு கேள்விதான், குடியரசுத் தலைவர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கப் போகிறாரா இல்லையா?

**நெறியாளர்:** பங்கேற்க மாட்டார் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்று சொல்கிறார்களே?

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** இருக்கலாம், ஆனால் பத்திரிகையில் அவர் பெயரை போட்டாகனும். குடியரசுத் தலைவர் வரக் கூடிய நிகழ்ச்சியில் அவர் பெயரை புறக்கணிச்சுட்டு நீங்கள் அழைப்பிதழை அடிக்க முடியாது. அதற்காகத்தான் நான் டேபிள் ஆப் பிரசிடென்சியை மேற்கோள் காட்டினேன். அதன் படி முதலில் அவர் தான் வருகிறார். அதற்குப் பிறகு துணை குடியரசுத் தலைவருக்குப் பிறகு தான் பிரதமர் வருகிறார்.

**நெறியாளர்:** இது அழைப்பிதழ், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கால் லெட்டர் மாதிரி இதனைப் பார்க்க முடியாதா?

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** அழைப்பிதழ் என்று சொல்லிட்டு, அதற்குப் பிறகு லெட்டர் மாதிரி என்று சொல்வது என்ன லாஜிக் என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் முறைப்படி அடித்த அழைப்பிதழ்தானே வெளிவந்து இருக்கிறது. இதனை அவர்கள் மறுக்கவில்லையே, குடியரசுத் தலைவர் வரப்போகிறாரா என்ற கேள்விக்கு தீர்க்கமான பதிலே இல்லையே.

**நெறியாளர்:** நாடாளுமன்றத்தில் செங்கோல் வைப்பதில் ஸ்பீக்கருக்கு புதியதாக பவர் வந்திருப்பதாக இங்கே பேசியவர் குறிப்பிட்டார், இதனை நீங்கள் எப்படி பார்க்குறீங்கள்?

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** செங்கோல் வைத்ததினால் ஸ்ப்பீக்கருக்கு பவர் அதிகாரம் கிடைத்திருப்பதாக சொல்கிறார். முக்கியமானது அந்த செங்கோலை மவுண்ட் பேட்டன் பிரபுவிடம் இருந்து நேரு நேரடியாக வாங்க வில்லை, மவுண்ட்பேட்டன் பிரபுவிடம் இருந்து ஆதினம் வாங்கி, ஊர்வலமாக முந்தைய நாள் இரவு கொண்டுவரப்பட்டு நேரு அவர்களிடத்தில் ஆதினம் அவர்களால் ஒப்படைக்கப்பட்டது.

நேரு அவர்களிடம் இந்த செங்கோல், மவுண்ட் பேட்டன் பிரபு நேரடியாக ஒப்படைக்கப்படவில்லை என்று பல்வேறு வரலாறுகள் இருக்கின்றது. அதனால் நாம் அதற்குள் போக வேண்டாம். அப்போது நடந்தது அரசு மாற்றப்பட்டதற்கான ஒரு அடையாளம். ஒரு சுதந்திர நாடு, உங்கள் காலனி ஆதிக்கத்தில் நாங்கள் இல்லை அப்படி என்பதை பறைசாற்றும், ஒருவிதமான டிரான்சிசனை ஒரு அடையாளத்துக்காக அது கொடுக்கப்பட்டது.

இன்றைக்கு ஜனநாயக நாட்டில் , அதற்குப் பிறகு நாம் குடியரசாக ஆகிவிட்டோம். மீண்டும் அதையேதான் சொல்கிறேன். 1950 இல் குடியரசாக ஆகி விட்டோம். இன்றைக்கு இந்த நாட்டை வழி நடத்துவது அரசியலமைப்புச் சட்டம். அந்த அரசியலமைப்புச் சட்டம் தான் பிரதானமாக இருக்க வேண்டும். அதற்கு செங்கோல் தேவையில்லை. ஆப் த பீப்பிள், பை த பீப்பீள், ப்பார் த பீப்பிள் என்று சொல்லிட்டு மன்னராட்சியில் இருக்கக் கூடிய செங்கோலை எதற்காக நீங்கள் கொண்டு வந்து வைக்கிறீர்கள்? இன்றைக்கு ஒரு சபாநாயகர் இருப்பார், இன்றைக்கு ஒரு பிரதமர் இருப்பார், அவர் நாளைக்கு போய் விடுவார், மக்கள் மன்றம் தான் நிரந்தரம். அவர்கள்தானே எஜமானர்கள், அங்கே செங்கோலுக்கு என்ன தேவை இருக்கிறது. உண்மையில் மதிக்கப்பட வேண்டியது அரசியலமைப்புச் சட்டம்தானே, அரசியலமைப்புச் சட்டத்தின் படி தானே.

**நீங்கள் திருப்பித் திருப்பி பேசுவது, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பற்றி பேசுவது என்பது தனிப்பட்ட ஒரு திரௌபதி முர்மு அவர்களைப் பற்றிய விஷயம் இல்லை இது. குடியரசுத் தலைவர் என்கிற பதவி இருக்கு இல்லையா? அந்த பொஷிசன் அந்த, ஆபிஸ் ஆப் த பிரசிடெண்ட் , அதற்கான மரியாதை கொடுக்கப்பட வேண்டும். அவர் திறக்கப்பட வேண்டும் என்பது தான் கேள்வி. இதில் நீங்கள் திருப்பி திருப்பி இங்கே செய்யவில்லையா, அங்கே செய்ய வில்லையா? இப்படி பேசுவதற்காகவா உங்களை ஆட்சியில் உட்கார வைத்தார்கள் மக்கள்.**

பிரதமர் 2014 இல் ஆட்சிக்கு வந்த போது பாராளுமன்றத்தை வணங்கிட்டு வந்தார். 2019 இல் ஆட்சிக்கு மீண்டும் வந்த போது அரசியலமைப்பு சட்டத்தை வணங்கிட்டு வந்தார் . அந்த அரசியலமைப்பு சட்டத்தை வணங்கிட்டு வந்ததை மதிக்க வேண்டும் என்று தானே கேட்கிறார்கள்.

**நெறியாளர்:** எல்லா நிகழ்ச்சிகளுக்குமா குடியரசுத் தலைவரை அழைக்க வேண்டும், எல்லாவற்றையும் அவர்தான் திறந்து வைக்க வேண்டுமா?

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன், இது என்ன பா.ஜ.க.வின் ஹெட்குவாட்டர்ஸ் சையா திறந்து வைக்கிறாங்க, நாடாளுமன்றக் கட்டிடத்தை திறந்து வைக்கிறாங்க , எல்லா நிகழ்ச்சிகளுக்குமா என்று பேசிக்கிட்டு இருக்காங்க

**நெறியாளர் :** பிரதமர் இந்தியாவின் பிரதமர் தானே,

**பத்திரிகையாளர் கார்த்திகேயன்:** புரோட்டாக்கால் படி அவருக்கு மேல் இரண்டு பேர் இருக்கிறார்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், ஸ்பீக்கர் ஆப் லோக்சபா என்று கூப்பிடுகிறீர்கள், ராஜ்ய சபாவிற்கு ஸ்பீக்கர் யார், அவரை ஏன் கூப்பிடவில்லை, ஆண்டின் முதல் கூட்டத்தை பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தை துவங்கும் போது குடியரசுத் தலைவரை அழைத்து தானே துவங்குறீங்க.

இங்கே வந்து ஆளுநரை வைத்துத் தானே தொடங்குறீங்க, அது ஆயிரம் சர்ச்சைகள் இருக்கட்டும் கருத்து வேறுபாடுகள் இருக்கட்டும், அதனை தொடங்கும் போது ஆளுநரை அழைத்து தானே தொடங்குகிறார்கள்.

இது ஒரு சரித்திர நிகழ்வு, அடுத்த நூறு ஆண்டுகளுக்கோ, மேலும் எவ்வளவோ ஆண்டுகளுக்கோ இதுதான் பாராளுமன்றம். இந்தியாவின் தலையெழுத்தை அல்லது எதிர்க்காலத்தை தீர்மானிக்கக் கூடிய பாராளுமன்றத்தை, அதனை துவக்கும் நிகழ்ச்சிக்கு, குடியரசுத் தலைவரான முதல் குடிமகனைப் புறக்கணிப்பது எப்படி சரியாகும்.

அன்று திரௌபதி முர்முவை எதிர்த்தார்கள் என்றால், ஆனால் இன்று திரௌபதி முர்மு அவர்கள் தான் குடியரசுத் தலைவர் ஆகி விட்டார், அவரை பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ அவர்தான் குடியரசுத் தலைவர். மோடி அவர்கள் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் அவர்தான் பிரதமர். அதே போல் தான் திரௌபதி முர்முவை தேர்ந்தெடுக்கப்படும் போது எதிர்க்கட்சிகளுக்கு அவர் வேட்பாளராக இல்லாமல் இருக்கலாம், ஆனால் இன்றைக்கு அவர் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த பதவியை அவர் அலங்கரிக்கும்போது அதற்குரிய அங்கீகாரமும், அதற்குரிய மதிப்பும் அவருக்கு வந்திருக்கு. அதனை குறைக்கப்படும் போது அதனைக் காக்க வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கு.

இவ்வாறு பத்திரிகையாளர் கார்த்திகேயன் நியூஸ் 18 தொலைக்காட்சி சொல்லதிகாரம் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.

---

### முதலமைச்சரின் நடவடிக்கைகளால் - தமிழ்நாட்டில்

# சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரிப்பு!

## கொடைக்கானலில் ஆய்வுக்குப் பின் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

*திண்டுக்கல், மே 27 - கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி, படகு குழாம்களில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.*

*திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி, படகு குழாம்களில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (25.5.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கொடைக்கானல் சின்னப் பள்ளம் பகுதியில் ஹெலி காப்டர் இறங்குதளம் அமைப்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கொடைக்கானல் படகு குழாம் அலகு1 மற்றும் அலகு2 ஆகிய இடங்களில் படகுகள் இயக்கத்தையும், கொடைக்கானல் தொலைநோக்கி இல்லத்திற்குச் சென்று தொலைநோக்கியின் செயல்திறனை இயக்கி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*இந்த இடங்களில் சுற்றுலா பயணிகளுடன் கலந்துரையாடினார். மேலும் கொடைக்கானல் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிக்கு சென்று அறைகள் மற்றும் உணவு விடுதி ஆகியவற்றில் ஆய்வு மேற்கொண்டார்.*

*பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்ச ந்திரன் தெரிவித்ததாவது,*

*தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். நாட்டின் அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத் துறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலாத் பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.*



*கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த சுற்றுலாத்துறை முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.*

*தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலா தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் பொதுமக்களுக்கு தங்கும் வசதி சேவையை வழங்கி வருகின்றன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் மதுரை, கோவை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு உள்பட முக்கிய நகரங்களில் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில் நகரின் மையப்பகுதிகளில் குறைவான கட்டணத்தில் செயல்பட்டு வருகின்றன.*

*தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக தங்கும் விடுதிகளில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றது.*

*முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது.*

*கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023-ல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் மட்டும் 2,67,773 ஆக உயர்ந்துள்ளது.*

*இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் 6,64, 90,154 என உயர்ந்துள்ளது.*

*சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை கொடைக்கானல், உதகமண்டலம், பைக்காரா, ஏற்காடு, முட்டுக்காடு, முதலியார் குப்பம், பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப் படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.*

*இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.*

*இந்த ஆய்வுகளின் போது கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் இரா.ராஜா, கொடைக்கானல் நகர்மன்ற தலைவர் பா.செல்லத்துரை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மதுரை மண்டல மேலாளர் நெ.டேவிட் பிரபாகர், உதவி செயற் பொறியாளர் அ.சீனி வாசன், சுற்றுலா அலுவலர் (பொறுப்பு) திருமதி.த. சுதா, கொடைக்கானல் ஓட்டல் தமிழ்நாடு மேலாளர் செ.அன்பரசன் உள்பட அரசு அலுவலர்கள், சுற்றுலாத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



மதுரை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பாக நடைபெற்ற விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் மொத்தம் 362 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 3 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் பொன்குமார், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், தொழிலாளர் இணை ஆணையர் பெ.சுப்பிரமணியன், கூடுதல் தொழிலாளர் ஆணையர், தி.குமரன் , மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.